சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **107/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | ராஜா |
| தந்தை பெயர் | : | பாலு |
| கிராமம் | : | அகிலாம்பேட்டை |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | லோடுமேன் |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3, 4, 6, 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் காவலில் இருந்து வருகிறார். அவர் பி.டி. வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். 5ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். லோடுமேனாக பணிபுரிந்து வருகிறேன். நான் தற்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கட்சியில், திருவாரூர் மாவட்டம், பேரளம் பேரூராட்சியில், விவசாய தொழிலாளர் சங்கத்தினுடைய நகர செயலாளராக செயல்பட்டு வருகிறேன். ஆஜர்படுத்தப்பட்டுள்ள 1ம் எதிரி, மற்றும் ஆஜராகியுள்ள 3, 4, 6, 8 ஆகிய எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை எப்படி தெரியும் என்றால் திருமெய்ச்சூர் என்ற ஊரில் தண்டத்தோப்பு என்ற இடத்தில் எதிரிகள் குடியிருந்து வந்தனர். எனது ஊருக்கு அருகாமையில் உள்ள ஊர்தான் திருமெய்ச்சூரில் வசித்து வருகிறார்கள். 1வது எதிரி காளீஸ்வரன் மற்றும் 3வது எதிரி ஜீவா ஆகியோர்களின் தகப்பனாரான 7வது எதிரி பன்னீர்செல்வம் என்பவரையும் தெரியும். எதிரிகள் அனைவரும் தேவர் சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

2. இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன நாவலன் என்பவர் சி.பி.ஐ.(எம்)-ல் மாவட்ட செயற்குழு உறுப்பினராகவும், விவசாய தொழிலாளர் சங்கத்தில் செயலாளராகவும் இருந்து வந்தார். நானும், இறந்துபோன நாவலன் என்பவரும் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர்கள். நானும், அவரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்பதால், நன்கு தெரியும்.

3. நானும், இறந்து போன நாவலனும், 7வது எதிரியான பன்னீர்செல்வம் மற்றும் அவரது குடும்பத்தார் சாராயம் விற்பனை செய்வது தொடர்பாக அடிக்கடி ஆர்ப்பாட்டம், போராட்டம், சாலை மறியல் செய்து வந்தோம். இதனால் பன்னீர்செல்வம் குடும்பத்தினருக்கும் எங்களுக்கும் இடையே காழ்ப்புணர்ச்சி இருந்து வந்தது.

4. கடந்த 08.09.2010 ம் தேதியன்று பன்னீர்செல்வம் என்பவரின் வீடு எரிந்து விட்டது. அது சம்மந்தமாக எங்களுக்கு எதுவும் தெரியாது. அது சம்மந்தமாக போலீசார் எங்கள் தரப்பினர் மீது வழக்கு பதிவு செய்தார்கள்.

அது விசாரணை நீதிமன்றத்தில் எங்கள் மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

5. கடந்த 19.01.2011ம் தேதியன்று நானும், நாவலன் என்பவரும் பேரளத்திலிருந்து திருமெய்ஞானம் என்ற ஊருக்கு நாகூரான் அஞ்சான் என்ற தியாகிகள் நினைவு நிகழ்ச்சிக்கு சென்றோம். பேரளத்திலிருந்து கிளம்பும்போது, மாலை 04.45 க்கு சென்றோம். பல்சர் என்ற இரு சக்கர வாகனத்தில் சென்றோம். நான் வாகனத்தை ஓட்டி சென்றேன். நாவலன் பின்னால் அமர்ந்து வந்தார். திருமெய்ஞானம் என்ற ஊரிலிருந்து நிகழ்ச்சியை முடித்து விட்டு மாலை 06.00 மணிக்கு கிளம்பினோம். நானும் நாவலனும் இரு சக்கர வாகனத்தில் வந்தோம். மேற்படி இரு சக்கர வாகனத்தை நான் ஓட்டி வந்தேன். அதன் பின்னால் நாவலன் அமர்ந்து வந்தார். காரைக்காலிலிருந்து பேரளம் வரும் வழியில் கீழமாங்குடி என்ற இடத்தின் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தோம். அப்போது மாலை 07.30 மணியளவில் எங்களுக்கு பின்னால் இரண்டு இரு சக்கர வாகனங்களில் ஒவ்வொரு வாகனத்திலும் தலா 3 நபர்கள் வீதம் மொத்தம் 6 நபர்கள் வீச்சரிவாளுடன் வந்து மறித்தார்கள். அங்கு வந்திருந்த 6 நபர்கள், காளீஸ்வரன் (1வது எதிரி ), பிரகாஷ் (2வது எதிரி), ஜீவா (3வது எதிரி), , ராமன் (4வது எதிரி), பச்சப்பிள்ளை (5 வது எதிரி), பரதன் (6 வது எதிரி ) ஆகியோர்கள் ஆவார்கள். அவர்கள் எங்கள் வாகனத்தை மறித்ததில், நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனம் கீழே விழுந்து விட்டது. அதிலிருந்து நானும், நாவலனும் விழுந்தோம். 1ம் எதிரி காளீஸ்வரன் என்பவர் வீச்சரிவாளால் எனது முன்னந்லையில் வெட்டினார். நான் அங்கிருந்த ஒரு வேலியை தாண்டி அருகாமையில் இருந்த ஒரு வீட்டின் சுவர் ஓரமாக ஒளிந்து கொண்டேன். நாவலன் தெற்கு நோக்கி ஓடினார். 6 பேரும் வீச்சரிவாளுடன் விரட்டினார்கள். காளீஸ்வரன் (1வது எதிரி) கையில் இருந்து ஏதோ ஒன்றை வீசினார். அப்பொழுது நாவலன், சங்கர் என்பவரது வீட்டிற்குள்

சென்று விட்டார். மேற்சொன்ன 6 நபர்களும், சங்கரின் வீட்டிற்குள் வீச்சரிவாளுடன் போனார்கள். ஒரு 10 நிமிடம் கழித்து வீச்சரிவாளுடன் திரும்பி வந்து விட்டார்கள். பின்னர் இரு சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டார்கள். நான் சங்கர் என்பவரின் வீட்டிற்கு போய் பார்த்தேன். இரத்த வெள்ளத்தில் நாவலன் கிடந்தார். அருகாமையில் போய் பார்த்தபோது, மூளை சிதறி கிடந்தது. இடது கை, இடது தோள்பட்டை வெட்டு காயங்கள் இருந்தது. மல்லாந்த நிலையில் கிடந்தார்.. அவருக்கு உயிர் இல்லை.

6. நான் சங்கர் வீட்டிற்குள் போய் பார்த்துக்கொண்டிருக்கும்போது, எனக்கு பின்னால் சின்னப்பா, பிச்சையன், பெரியசாமி, ஆகியோர்களும் வந்து பார்த்தார்கள். அங்கு வந்தவர்களிடமிருந்து செல்போனை வாங்கி நாவலனின் மனைவியான அ.சா.1 வசந்தா என்பவருக்கு தகவல் சொன்னேன். பின்னர் நான் அங்கேயே இருந்தேன். அ.சா.1 ம், அவரது மகள் செங்கொடி என்பவரும் இரவு 08.00 மணியிலிருந்து 08.15 மணிக்குள் வந்து விட்டார்கள்.

7. இரவு 11.00 மணியளவில் நானும், அ.சா.1 வசந்தா மற்றும் அவரது மகளான செங்கொடி ஆகியோர்கள் பேரளம் காவல் நிலையத்திற்கு சென்றோம். அ.சா.1 வசந்தாவின் உறவினர் ஒருவர் மூலம் புகார் எழுதிக் காவல் நிலையத்தில் கொடுத்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து, மேல் நடவடிக்கை எடுத்தார்கள். எனக்கு காயம் இருந்ததால் போலீசார் மெமோ கொடுத்து நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கா போக சொன்னார்கள். நான் அரசு மருத்துவமனைக்கு போகும் வழியில் வலி அதிகமாக இருந்ததாலும், இரத்தம் அதிகமாக வந்ததாலும், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். தனியார் மருத்துவமனையில் எனக்கு தலையில் முன் நெற்றியில் உள்ள காயத்திற்கு தையல் போடப்பட்டது. பின்னர் நான் நன்னிலம் அரசு

மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னை இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

8. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் 7 அரிவாள்களில் ஆறு அருவாள்கள் வீச்சருவாள், ஒரு அருவாள் சாதாரண அருவாள். இந்த சாதாரண அருவாளின் கைப்பிடி இடத்தில் சணல் சுத்தப்பட்டுள்ளது. இந்த அருவாள்களில் வீச்சருள்வாளாக காணப்படும் ஆறு அருவாள்கள் ஒன்றால் தான் என்னை 1ம் எதிரி தாக்க பயன்படுத்திய அருவாள் ஆகும். ஆறு வீச்சருவாள்களில் குறிப்பாக எந்த அருவாள் என்று என்னால் சரியாக அடையாளம் காட்ட இயலாது. சம்பவ இடத்தில் இருந்த 6 நபர்களும் நீதிமன்றத்தில் காட்டப்படும் வீச்சருவாள்கள் போன்ற அருவாள்களை தான் வைத்திருந்தார்கள். இந்த 6 வீச்சருவாள்களும் சாபொ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

9. சம்பவம் நடந்த இடத்தில் ஒரு லைட் போஸ்ட் இருந்தது. மேலும், சங்கர் என்பவர் வீட்டில் அருகில் ஒரு லைட் போஸ்ட் இருந்தது. அதனால் அங்கு வெளிச்சம் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:29:15 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.